நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.99/2021

அரசு தரப்புக்காக அ.சா.9 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சுப்புராயலு | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 17 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of March 2026.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 2.20)

நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் கடலூர் பொருளாதார குற்ற துறையில் 2016 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்று தற்போது செஞ்சியில் வசித்து வருகிறேன். கடந்த 2011 ஆம் ஆண்டு மங்கலம்பேட்டை காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது மங்கலம்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.255/2011 சட்டபிரிவு 174(3) கு.வி.மு.ச பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை அப்போது நிலைய பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் திரு.பொட்டா என்பவர் பதிவு செய்து விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்ததை நான் புலன்

விசாரணைக்கு எடுத்துக்கொண்டு முதல் தகவல் அறிக்கை பார்வையிட்டதில் இறந்த நபர் திருமணமாகி 7 ஆண்டுகளுக்குள்ளாக இறந்துபோனதால் முதல் தகவல் அறிக்கையும் மற்றும் தனி அறிக்கையும் பிரேத விசாரணைக்காக கோட்டாட்சியர் அவர்களுக்கு மங்கலம் பேட்டை காவலர் 629 திரு.சஞ்சீவ் என்பவர் மூலம் அனுப்பிவைத்தேன். பின்னர் சம்பவ இடமான விஜயமாநகரம் இறந்த நபரின் வீட்டிற்கு சென்று 30.09.2011 ஆம் தேதி 16.00 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் திருமயில் மற்றும் ஜெயசங்கர் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் இரண்டு மாதிரி வரைபடங்கள் தயார் செய்தேன். (அந்த பார்வை மகசர் **அ.த.சா.ஆ.10** ஆகவும் இரண்டு மாதிரி வரைபடங்கள் **அ.த.சா.ஆ.11** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது). பின்னர் சாட்சிகள் சங்கர், சுமதி, சந்திரா, பழனியம்மாள், முத்து, காமராஜ், ஜெயராமன், திருமயில் மற்றும் ஜெயசங்கள் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் தயார் செய்தேன். சாட்சிகள் விசாரணையிலிருந்தும், சம்பவ இடத்தை பார்வையிட்டதிலிருந்தும் இவ்வழக்கின் சட்டபிரிவு 174(3) குவிமுச பிரிவிலிருந்து 498(A) மற்றும் 306 இதச –ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். (அந்த 30.09.2011 ஆம் தேதியிட்ட பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி அறிக்கையுடன் முதல் தகவல் அறிக்கை நகல் மற்றும் புகார் மனு நகலை உடன் இணைத்து அனுப்பினேன். பின்னர் இவ்வழக்கின் எதிரி பாலசுப்ரமணியனை 30.09.2011 ஆம் தேதி 17.30 மணிக்கு விஜயமாநகரத்தில் உள்ள எதிரியின் வீட்டில் கைது செய்தும் அவரை

அன்றே நீதிமன்ற காவலுக்கு உத்தரவு கேட்டு அனுப்பி வைத்தேன். 27.03.2013 அன்று இறந்துபோன சத்யாவை பிரேத பரிசோதனை செய்த டாக்டர் குலோத்துங்கன், டாக்டர் சித்ரா ஆகியோரை விசாரணை செய்து சான்று பெற்று தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் பணி மாறுதலாகி சென்று விட்டதால் வழக்கு கோப்பினை காவல் நிலையத்தில் வைத்து சென்றேன். என்னுடைய விசாரணையின்போது சாட்சி ஜெயசங்கர், திருமயில் ஆகியோர் சொன்ன விவரங்களைத் தான் வாக்குமூலமாக பதிவு செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் கோட்டாட்சியரை விசாரணை செய்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் என்னுடைய விசாரணையின்படி வரதட்சணை கொடுமை எதுவும் இல்லை என்றால் சரிதான். சாட்சிகள் சங்கர், சுமதி ஆகியோர் தங்களுடைய மகள் என்ன காரணத்திற்காக இறந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

எனது விசாரணையின்போது சாட்சி சங்கர் *வரதட்சணையாக வண்டி, சீர் சாமான்கள் கேட்டு தொந்தரவு செய்தார்"* என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை.

எனது விசாரணையின்போது சாட்சி சுமதி "*சாமான்கள் மற்றும் வண்டி வாங்கித்தர சொல்லி கேட்டு அடித்தாக தன் மகள் தன்னிடம் சொன்னதாக"* சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை.

இறந்துபோன பெண் இருக்கும் வீட்டில் இன்னொரு பெண்ணை திருமணம் செய்து அழைத்து வந்து இங்கு தான் குடும்பம் நடத்துவேன் என்று எதிரி என் மகளிடம் கூறினார் என்ற விவரத்தை எனது

விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் இல்லை. புகாரில் என்ன காரணத்திற்காக சாவில் சந்தேகம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்களா என்றால் குறிப்பிடவில்லை. சரிவர புலன் விசாரணை செய்யாமல் பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகளை விசாரிக்காமல் வாக்குமூலங்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 02.46)

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 06 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.